பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 4

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 11

1 செயல்களுக்கான பிரதிபலன் குறித்த இறைவசனங்கள் 13

- இஸ்லாமியக் கல்வி மற்றும் செயல்களுக்குத் தடங்கலாக இருப்பவற்றை அகற்றுவது 19

2 தடைக்கற்களை நீக்குதல் 24

3 ஸுன்னத்துகள், முஸ்தஹப்புகளுக்கு முன் வாஜிபுகள் 29

4 யாரிடமிருந்து துவக்குவது 30

5 அழைப்பதில் யாரை முதன்மைப்படுத்துவது? 37

6 அழகிய முறையில் இஸ்லாமை பின்பற்றுவது 40

7 நல்லுபதேசத்தின் தாக்கம் என்ன? 44

8 மார்க்க ஆதாரத்தில் சிந்தனையைச் செலுத்துவது முதன்மையான செயல் 47

9 செயலின் பலன் பிரார்த்தனையே 51

10 கற்ற கல்வியின்படிச் செயல்படாதவனுக்குத் தண்டனை 59

11 பயனுள்ள கல்வியின் அடையாளம் 62

12 அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஓர் அழைப்பு 64

13 அழைப்பாளர்கள், மஸ்ஜிதுகளின் இமாம்களுக்கு ஓர் அழைப்பு 69

14 நூலாசிரியர்கள், வெளியீட்டாளர்களுக்கு ஓர் அழைப்பு 72

15 வியாபாரிகளுக்கு ஓர் அழைப்பு 76

16 செயல்தான் கல்வியின் தேட்டம் - சில நன்மொழிகள் 78

1

செயல்களுக்கான பிரதிபலன் குறித்த இறைவசனங்கள்

❁

அல்லாஹ் கூறுகிறான்:

كُلُوا وَاشْرَبُوا هَنِيئًا بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ

சொர்க்கத்தில் அவர்களை நோக்கி, 'நீங்கள் செய்த நன்மைகளின் காரணமாக (இதில் உள்ளவற்றை) மிக்க தாராளமாக உண்டும் பருகியும் இருங்கள்' என்றும் கூறப்படும். (குர்ஆன் 52:19)

وَنُودُوا أَنْ تِلْكُمُ الْجَنَّةُ أُورِثْتُمُوهَا بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ

'பூமியில் நீங்கள் செய்துகொண்டிருந்த (நன்மையான) செயல்களின் காரணமாகவே இந்தச் சுவர்க்கச் சோலைக்கு நீங்கள் வாரிசாக ஆக்கப்பட்டுள்ளீர்கள்' என்று சப்தமிட்டு அழைக்கப்படுவார்கள். (குர்ஆன் 7:43)

جَنَّاتُ عَدْنٍ يَدْخُلُونَهَا تَجْرِي مِنْ تَحْتِهَا الْأَنْهَارُ لَهُمْ فِيهَا مَا يَشَاءُونَ كَذَلِكَ يَجْزِي اللَّهُ الْمُتَّقِينَ الَّذِينَ تَتَوَفَّاهُمُ الْمَلَائِكَةُ طَيِّبِينَ يَقُولُونَ سَلَامٌ عَلَيْكُمُ ادْخُلُوا الْجَنَّةَ بِمَا كُنْتُمْ تَعْمَلُونَ

(அவ்வீடு) என்றென்றும் நிலைத்திருக்கக்கூடிய சுவர்க்கச் சோலைகளாகும். அவற்றில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும். அவர்கள் விரும்பியதெல்லாம் அங்கு அவர்களுக்குக் கிடைக்கும். அல்லாஹ்வைப் பற்றிய அச்சமுடையவர்களுக்கு இவ்வாறே அல்லாஹ் கூலி கொடுக்கின்றான். இத்தகைய வர்களின் உயிர்களை வானவர்கள், அவர்கள் நல்லவர்களாக இருக்கின்ற நிலைமையில் கைப்பற்றுகின்றார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி, 'ஸலாமுன் அலைக்கும் (உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக!) நீங்கள் நற்செயல் செய்துகொண்டிருந்ததின்

2

தடைக்கற்களை நீக்குதல்



وَعَنْ أَبِي بَكْرِ بْنِ أَبِي مُوسَى الْأَشْعَرِيِّ قَالَ: سَمِعْتُ أَبِي وَهُوَ بِحَضْرَةِ الْعَدُوِّ يَقُولُ: قَالَ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم إِنَّ أَبْوَابَ الْجَنَّةِ تَحْتَ ظِلَالِ السُّيُوفِ فَقَامَ رَجُلٌ رَثُّ الْهَيْئَةِ فَقَالَ: يَا أَبَا مُوسَى أَأَنْتَ سَمِعْتَ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم يَقُولُ هَذَا؟ قَالَ: نَعَمْ فَرَجَعَ الرَّجُلُ إِلَى أَصْحَابِهِ فَقَالَ: أَقْرَأُ عَلَيْكُمُ السَّلَامَ ثُمَّ كَسَرَ جَفْنَ سَيْفِهِ فَأَلْقَاهُ ثُمَّ مَشَى بِسَيْفِهِ إِلَى الْعَدُوِّ فَضَرَبَ بِهِ حَتَّى قُتِلَ

அபூ மூசா ﷺ அவர்களின் மகன் அபூ பக்ர் ﷺ கூறினார்கள்: எனது தந்தை எதிரிகளுக்கு முன்னிலையில் இருக்கும்போது நிச்சயமாகச் சொர்க்கம் வாள்களின் நிழல்களுக்குக் கீழே உள்ளது என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ கூறியதாகச் சொன்னார்கள். அப்போது அலங்கோலமான தோற்றத்தில் இருந்த ஒரு மனிதர் எழுந்து, 'அபூமூசாவே, அல்லாஹ்வின் தூதர் ﷺ இவ்வாறு சொன்னதை நீங்கள் நேரடியாகச் செவியுற்றீர்களா' என்று கேட்டார். அதற்கவர் 'ஆம்' என்று பதிலளித்தார். உடனே அம்மனிதர் தனது தோழர்களிடம் திரும்பிச் சென்று நான் உங்களுக்கு ஸலாம் கூறுகிறேன் என்று சொல்லிவிட்டு, பின்பு தனது வாளின் உறையை உடைத்துத் தூக்கி எறிந்தார். பிறகு தனது வாளுடன் எதிரிகளை நோக்கி நடந்து சென்று அதன் மூலம் வெட்ட ஆரம்பித்தார். இறுதியில் அவர் கொல்லப்பட்டார். (முஸ்லிம் 1902)

وَعَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ رضي الله عنهما قَالَ: قَالَ رَجُلٌ لِلنَّبِيِّ صلى الله عليه وسلم يَوْمَ أُحُدٍ: يَا رَسُولَ اللهِ أَرَأَيْتَ إِنْ قُتِلْتُ؟ فَأَيْنَ أَنَا؟ قَالَ: فِي الْجَنَّةِ فَأَلْقَى تَمَرَاتٍ كُنَّ فِي يَدِهِ ثُمَّ قَاتَلَ حَتَّى قُتِلَ

ஜாபிர் ﷺ அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் (ஒரு போரின்போது) 'நான் கொல்லப்பட்டால் எங்கே இருப்பேன் அல்லாஹ்வின்

5

அழைப்பதில் யாரை முதன்மைப்படுத்துவது?



முன்பு கூறியதுபோல் உங்களது சகோதரன், தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவருக்கும் முன்பு உங்களை நீங்கள் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். அல்லாஹ் ஸுப்ஹானஹு வ தஅலா கூறுகிறான்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ

நம்பிக்கையாளர்களே! உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் நரக நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும் கற்களுமே ஆகும். அதில் கடுமையான பலசாலிகளான வானவர்கள் காவல் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்யமாட்டார்கள். தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள். *(குர்ஆன் 66:6)*

அடுத்து பிள்ளைகளை முறையாக வளர்ப்பதில் உங்களுக்கு உதவி செய்வதற்காக உங்களது மனைவியின் நிலையைச் சரிபடுத்திக் கொள்ள வேண்டும். இதை உங்களது அண்டை வீட்டுக்காரர் மற்றும் உமது நண்பர் ஆகியோரிடம் அழைப்புப்பணி செய்வதற்கு முன் செய்துவிடவேண்டும். அதேபோல் சிறிய தந்தையின் பிள்ளைகளிடம் அழைப்புப்பணி செய்வதற்கு முன் உங்களது சகோதரரின் பிள்ளைகளிடம் அழைப்புப்பணி செய்துவிடவும். நண்பர்களிடம் அழைப்புப்பணி செய்வதற்கு முன் சிறிய தந்தையின் பிள்ளைகளிடம் அழைப்புப்பணி செய்துவிடவும். இவ்வாறு அல்லாஹ்வின் வழியில் அழைப்பதில் மிக நெருக்கமானவர்களை முதன்மைப்படுத்தவும்.

7

நல்லுபதேசத்தின் தாக்கம் என்ன?



وَعَنْ حَكِيمِ بْنِ حِزَامٍ رضي الله عنه قَالَ سَأَلْتُ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم فَأَعْطَانِي ثُمَّ سَأَلْتُهُ فَأَعْطَانِي ثُمَّ سَأَلْتُهُ فَأَعْطَانِي ثُمَّ قَالَ: يَا حَكِيمُ إِنَّ هَذَا الْمَالَ خَضِرٌ حُلْوٌ فَمَنْ أَخَذَهُ بِسَخَاوَةِ نَفْسٍ بُورِكَ لَهُ فِيهِ وَمَنْ أَخَذَهُ بِإِشْرَافِ نَفْسٍ لَمْ يُبَارَكْ لَهُ فِيهِ وَكَانَ كَالَّذِي يَأْكُلُ وَلَا يَشْبَعُ وَالْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِنَ الْيَدِ السُّفْلَى قَالَ حَكِيمٌ: فَقُلْتُ: يَا رَسُولَ اللهِ وَالَّذِي بَعَثَكَ بِالْحَقِّ لَا أَرْزَأُ أَحَدًا بَعْدَكَ شَيْئًا حَتَّى أُفَارِقَ الدُّنْيَا فَكَانَ أَبُو بَكْرٍ رضي الله عنه يَدْعُو حَكِيمًا إِلَى الْعَطَاءِ فَيَأْبَى أَنْ يَقْبَلَهُ مِنْهُ ثُمَّ إِنَّ عُمَرَ رضي الله عنه دَعَاهُ لِيُعْطِيَهُ فَأَبَى أَنْ يَقْبَلَ مِنْهُ شَيْئًا فَقَالَ عُمَرُ: إِنِّي أُشْهِدُكُمْ يَا مَعْشَرَ الْمُسْلِمِينَ عَلَى حَكِيمٍ أَنِّي أَعْرِضُ عَلَيْهِ حَقَّهُ مِنْ هَذَا الْفَيْءِ فَيَأْبَى أَنْ يَأْخُذَهُ فَلَمْ يَرْزَأْ حَكِيمٌ أَحَدًا مِنَ النَّاسِ بَعْدَ رَسُولِ اللهِ صلى الله عليه وسلم حَتَّى تُوُفِّيَ

ஹகீம் இப்னு ஹிஸாம் ﷺ அவர்கள் கூறினார்கள்: நான் நபி ﷺ அவர்களிடம் (உதவி) கேட்டேன். அவர்கள் எனக்கு வழங்கினார்கள்; மீண்டும் கேட்டேன், வழங்கினார்கள். மீண்டும் கேட்டேன்; வழங்கிவிட்டு, 'ஹகீமே! நிச்சயமாக இந்தச் செல்வம் பசுமையானதும் இனிமையானதுமாகும். யார் இதைப் போது மென்ற உள்ளத்துடன் எடுத்துக்கொள்கிறாரோ அவருக்கு இதில் வளம் ஏற்படுத்தப்படும்; யார் இதைப் பேராசையுடன் எடுத்துக்கொள்கின்றாரோ அவருக்கு அதில் வளம் ஏற்படுத்தப் படாது. அவன் உண்ட பின்பும் வயிறு நிரம்பாதவன் போலாவான். உயர்ந்த கை தாழ்ந்த கையைவிடச் சிறந்தது' என்று கூறினார்கள்.

அப்போது நான், 'அல்லாஹ்வின் தூதரே! உங்களைச் சத்தியத்துடன் அனுப்பிவைத்தவன் மீதாணையாக! உங்களுக்குப் பின் உலகைப் பிரியும் வரை வேறு யாரிடமும் நான் எதையும் கேட்கமாட்டேன்' எனக் கூறினேன்.

8

மார்க்க ஆதாரத்தில் சிந்தனையைச் செலுத்துவது முதன்மையான செயல்

وَعَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ رضي الله عنه قَالَ: قَالَ لِي رَسُولُ اللهِ صلى الله عليه وسلم اقْرَأْ عَلَيَّ قُلْتُ: أَقْرَأُ عَلَيْكَ وَعَلَيْكَ أُنْزِلَ؟ قَالَ: إِنِّي أُحِبُّ أَنْ أَسْمَعَهُ مِنْ غَيْرِي قَالَ: فَقَرَاتُ عَلَيْهِ سُورَةَ النِّسَاءِ حَتَّى بَلَغْتُ: فَكَيْفَ إِذَا جِئْنَا مِنْ كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَى هَؤُلَاءِ شَهِيدًا فَقَالَ: حَسْبُكَ الْآنَ فَالْتَفَتُّ إِلَيْهِ فَإِذَا عَيْنَاهُ تَذْرِفَانِ

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ﷺ அவர்கள் கூறினார்கள்: நபி ﷺ அவர்கள் என்னிடம் 'எனக்குக் குர்ஆனை ஓதிக்காட்டு' என்றார்கள். அதற்கு நான், 'அல்லாஹ்வின் தூதரே! உங்கள்மீது குர்ஆன் இறக்கப்பட்டிருக்க உங்களுக்கு நான் ஓதிக் காண்பிக்கவா?' என்று கேட்டேன். அதற்கவர்கள், 'ஆம்' என்று சொன்னார்கள். அப்போது நான் அந்-நிஸா அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தேன். எனவே, '(நபியே) ஒவ்வொரு கூட்டத்தினரையும் அவர்களுடைய சாட்சியுடன் நாம் கொண்டுவரும்போது நாம் இவர்கள்மீது சாட்சியாக உம்மையும் கொண்டு வந்தால் (உம்மை நிராகரிக்கும் இவர்களின் நிலைமை) எப்படி இருக்கும்' என்ற (41வது) வசனத்தை நான் அடைந்தபோது, 'இப்போது போதும்' என்றார்கள். உடனே நான் அவர்களை நோக்கித் திரும்பினேன். அப்போது அவர்களின் இரண்டு கண்களும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தன. (புகாரீ 5050, முஸ்லிம் 800)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தமக்கு முன்னிலையில் இறை வசனங்கள் ஓதப்படுவதைச் செவியுற்றுக்கொண்டிருந்தார்கள். முஹம்மது ﷺ அவர்களின் சமுதாயத்தின்மீது சாட்சியாளராக அவர்கள் வரும் காட்சியை எடுத்துக் கூறுகின்ற வசனம் அவர்களை அடைந்தபோது, 'இப்போது போதும்' என்று சொன்ன அவர்கள், அல்லாஹ்வைப் பற்றிய பயத்தினாலும் நடுக்கத்தினாலும் அழ ஆரம்பித்தார்கள்.

9

செயலின் பலன் பிரார்த்தனையே

❁

قُلْ مَا يَعْبَأُ بِكُمْ رَبِّي لَوْلَا دُعَاؤُكُمْ

(நபியே) நீர் கூறுவீராக: உங்களின் பிரார்த்தனை இல்லாவிட்டால் என் இரட்சகன் உங்களைப் பொருட்படுத்தியிருக்கமாட்டான். (குர்ஆன் 25:77)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

الدُّعَاءُ هُوَ الْعِبَادَةُ

பிரார்த்தனையே வணக்கமாகும். (அறிவிப்பு: நுஃமான் இப்னு பஷீர் ؓ, திர்மிதீ 3247, ஸஹீஹ் ஜாமிஃ 3407)

أَفْضَلُ الْعِبَادَةِ الدُّعَاءُ

வணக்கத்தில் மிகச் சிறந்தது பிரார்த்தனை செய்வதுதான். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, ஹாகிம் 1805, ஸஹீஹா 1579)

لَيْسَ شَيْءٌ أَكْرَمَ عَلَى اللهِ تَعَالَى مِنَ الدُّعَاءِ

அல்லாஹுத் தஆலாவிடம் பிரார்த்தனையைவிட மிக மதிப்புக் குரியது எதுவும் இல்லை. (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, திர்மிதீ 3370, ஸஹீஹ் ஜாமிஃ 5392)

இந்த ஆதாரங்களில் கவனத்தைச் செலுத்துபவர் நிச்சயமாக பிரார்த்தனை அல்லாஹ்வின் நேசத்தையும் அவனது திருப்தியையும் அடைந்துகொள்வதற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்வார். இந்தப் பிரார்த்தனை இல்லாவிட்டால் அல்லாஹ் நம்மைப் பொருட்படுத்தி இருக்கமாட்டான்.

நபி ﷺ அவர்களும் பிரார்த்தனைதான் வணக்கங்களிலெல்லாம் மிக மதிப்புக்குரியதும் அவற்றில் மிகச் சிறந்ததுமாகும் என்று தெளிவுபடுத்தியுள்ளார்கள். பிரார்த்தனை எனும் இந்த வணக்கம்

10

கற்ற கல்வியின்படிச் செயல்படாதவனுக்குத் தண்டனை

❁

يُجَاءُ بِالرَّجُلِ يَوْمَ القِيَامَةِ فَيُلْقَى فِي النَّارِ، فَتَنْدَلِقُ أَقْتَابُهُ فِي النَّارِ، فَيَدُورُ كَمَا يَدُورُ الحِمَارُ بِرَحَاهُ، فَيَجْتَمِعُ أَهْلُ النَّارِ عَلَيْهِ فَيَقُولُونَ: أَيْ فُلاَنُ مَا شَأْنُكَ؟ أَلَيْسَ كُنْتَ تَأْمُرُنَا بِالْمَعْرُوفِ وَتَنْهَانَا عَنِ المُنْكَرِ؟ قَالَ: كُنْتُ آمُرُكُمْ بِالْمَعْرُوفِ وَلاَ آتِيهِ، وَأَنْهَاكُمْ عَنِ المُنْكَرِ وَآتِيهِ

உஸாமா இப்னு ஸைது ﷺ அவர்கள் கூறியது: மறுமைநாளில் ஒரு மனிதர் கொண்டு வரப்பட்டு நரகத்தில் போடப்படுவார். அப்போது அவருடைய குடல்கள் வேகமாக நரகத்தில் வந்து விழும். கழுதை செக்கைச் சுற்றி வருவதைப்போல் அவர் சுற்றி வருவார். அப் போது நரகவாசிகள் அவரைச் சுற்றி ஒன்றுகூடி, 'இன்னாரே! உமக்கேன் இந்த நிலை? நீர் (உலக வாழ்வின்போது) நற் செயல் புரியும்படி எங்களுக்குக் கட்டளையிட்டு, தீமை புரிய வேண்டாமென்று எங்களைத் தடுத்தாயே?' என்று கேட்பார்கள். அதற்கு அவர், 'நற்செயல் புரியும்படி உங்களுக்கு நான் கட்டளை யிட்டேன்; ஆனால், அந்த நற்செயலை நான் செய்யவில்லை. தீமை புரிய வேண்டாமென்று உங்களை நான் தடுத்து வந்தேன்; ஆனால், அந்தத் தீமையை நானே செய்து வந்தேன்' என்று கூறுவார். (புகாரீ 3267, முஸ்லிம் 2989)

மற்றொரு நபிமொழியில் இடம்பெறுவது:

قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ: رَأَيْتُ لَيْلَةَ أُسْرِيَ بِي رِجَالًا تُقْرَضُ شِفَاهُهُمْ بِمَقَارِضَ مِنْ نَارٍ، فَقُلْتُ: مَنْ هَؤُلَاءِ يَا جِبْرِيلُ؟، فَقَالَ: الْخُطَبَاءُ مِنْ أُمَّتِكَ، يَأْمُرُونَ النَّاسَ بِالْبِرِّ وَيَنْسَوْنَ أَنْفُسَهُمْ، وَهُمْ يَتْلُونَ الْكِتَابَ أَفَلَا يَعْقِلُونَ

நான் வானுலகுக்கு இரவுப் பயணம் அழைத்துச் செல்லப்பட்ட இரவில் மனிதர்கள் சிலரின் உதடுகள் நெருப்புக் கத்தரிக்கோல்

13

அழைப்பாளர்கள், மஸ்ஜிதுகளின் இமாம்களுக்கு ஓர் அழைப்பு

அல்லாஹ்வின்பால் அழைக்கும் அழைப்பாளர்களே! பயனுள்ள கல்வியை அடைவதற்கும் நற்செயல் செய்வதற்கும் ஆர்வம் காட்டுங்கள். நற்குணத்தில் நல்ல முன்மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டும் என்பதை மறந்துவிடாதீர்கள். ஏனென்றால், பேசும் நாவைவிட ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் காட்டுகின்ற நாவு அதிகத் தாக்கத்தைச் செலுத்தும்.

உங்களைக் கொண்டு தாக்கத்துக்கு ஆளாவதில் முதன்மை யானவர்கள், உங்கள் பெற்றோரும் குடும்பத்தவரும் பிள்ளைகளும் தான். இத்தகைய தாக்கத்திற்குள்ளாக்கும் செயல்பாடு உங்களி டமிருந்து வெளிப்படுகிறதா, இல்லையா? உங்களது நடத்தை யிலும் குணத்திலும் கவனம் செலுத்துங்கள். அதனை உளத்தூய்மை யுள்ளவராக உண்மையுடன் செயல்படும் ஒரு வழிகாட்டியின் நடத்தையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

சகோதரர்களே! அல்லாஹ் உங்களுக்கு அருள்புரியட்டும். உங்களது குடும்பத்தையும் பிள்ளைகளையும் மறந்துவிட்டு எதுவரை மக்களுக்கு மத்தியில் உற்சாகத்துடன் அழைப்புப்பணியில் ஈடுபட்டுக்கொண்டிருப்பீர்கள். அல்லாஹ் உங்களை நேர்படுத் தட்டும். அழைப்புப்பணியில் இங்கும் அங்கும் சென்றுவிட்டு, தூங்குவதற்காகப் பின்னிரவில் உங்களது வீட்டிற்கு நீங்கள் சென்றுகொண்டிருப்பது எதுவரை நீடிக்கப்போகிறது? உங் களைப் போன்றவர்கள் அல்லாஹ்வின் இந்த வசனத்தை மறக்கக் கூடாது:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا قُوا أَنْفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلَائِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَا يَعْصُونَ اللَّهَ مَا أَمَرَهُمْ وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ

14

நூலாசிரியர்கள், வெளியீட்டாளர்களுக்கு ஓர் அழைப்பு

நூலாசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்களே! உங்களின் முயற்சியெல்லாம் எழுதுவதும் தொகுப்பதுமாக மட்டுமே இருக்க வேண்டாம். அல்லாஹ்வுக்கு முன்னிலையில் இதுவே உங்களுக்கு எதிரான ஆதாரமாக ஆகிவிடக் கூடாது. உங்களையும் உங்கள் சகோதரர்களையும் சீர்படுத்தி உங்கள் சமுதாயத்துக்கும் பயனாக இருக்கும் என்று நீங்கள் கருதுகின்ற விசயங்களை எழுதுங்கள். இவ்வுலக வாழ்வின் அற்பப் பொருளைத் தேடிக்கொள்ளும் வியாபாரமாகக் கல்வியை ஆக்கிவிடாமல் எச்சரிக்கையாக இருங்கள்.

நீங்கள் பொறாமை அல்லது பெற்றோருக்கு நன்மை செய்தல் அல்லது அல்லாஹ்வுக்காக நேசித்தல் அல்லது இறையச்சம் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் தொடர்புடைய ஆதாரங்களை எழுதுவதிலோ விளக்குவதிலோ ஆய்வுசெய்வதிலோ ஈடுபட்டுக் கொண்டிருக்கலாம். நிச்சயமாக உங்கள் பணி மகத்தானதுதான். ஆனாலும் இந்த ஆதாரங்களினால் பயன் பெறவேண்டியவர்களில் முன்னுரிமை உடையவராக நீங்கள் இருக்கின்றீர்கள். எனவே, உங்களுக்குள்ளேயே கேள்வி கேளுங்கள். உங்கள் மனதைப் பொறாமையிலிருந்து சுத்தப்படுத்தி வைத்திருக்கிறீர்களா? யார்மீது பொறாமை கொண்டிருக்கிறீர்கள்? எதற்காக? அல்-அம்மாரத்து பிஸ் ஸூஇ (தீமையை ஏவக்கூடியது) என்கிற நிலையில் இருக்கும் உங்களது மனதைக் குறித்து நல்லெண்ணம் கொள்ளாதீர்கள். நீங்கள் ஈடேற்றம் அடைவதற்காக அதனைச் சந்தேகப்படுங்கள். நிவாரணம் செய்து கொள்ளவும் மருந்து எடுத்துக்கொள்ளவும் விரையுங்கள். உங்களின் தொகுப்பையும் எழுத்தையும் முழுமைப்படுத்துவதற்கு முன் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவதற்கு விரையுங்கள். ஏதேனும் நூலுக்கு விளக்கவுரை எழுதுவது, அடிக்குறிப்பு எழுது

16

செயல்தான் கல்வியின் தேட்டம் – சில நன்மொழிகள்

இக்திழாஉல் இல்மில் அமல் (கல்வியின் தேட்டம் செயல்) எனும் நூலில் இடம்பெறும் நன்மொழிகள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவது நல்லது. இந்நூல் அல்-கத்தீப் அல்-பஃதாதீ ﵀ அவர்கள் எழுதியதாகும்.

கல்வி என்பது தந்தை. செயல் என்பது பிள்ளை. கல்வியானது செயலுடனும், நபிமொழி போன்றவற்றை அறிவிப்பதானது புரிதலுடனும் இருக்க வேண்டும்.

கல்வியை விட்டு ஒதுங்கியிருக்கும் காலமெல்லாம் செயல் மூலம் ஆறுதல் அடையமாட்டீர்கள். செயலில் குறைவைப்பவனாக இருந்துகொண்டு கல்வியின் மூலம் ஆறுதல் அடையமாட்டீர்கள். எனினும், அவ்விரண்டிலும் உங்களது பங்கு குறைவாக இருந்தாலும், குறைந்த அளவு செயலுடன் குறைந்த அளவு கல்வி இருப்பதே முடிவில் ஈடேற்றம் அடையச் செய்துவிடும். இது அல்லாஹ் தனது அருளைப் பொழிந்து தனது அருட்கொடையைத் தன் அடியான்மீது நிறைவாக்கும்போது நடந்துவிடும்.

கல்வி செயலுக்காக நாடப்பட வேண்டும். செயல் ஈடேற்றம் அடைவதற்காக நாடப்படுவது போன்று இருக்கும். கல்விக்கு செயல் குறைந்ததாக இருந்தால் அந்தக் கல்வி அந்தக் கல்வியாளருக்குப் பாரமாகும். செல்வங்கள் அவற்றைச் செலவிட்டாலே தவிர பயனளிக்காது என்பதுபோல் கல்விகளும் அவற்றின் மூலம் செயல்பட்டு அவற்றால் விளையும் கடமைகளையும் பேணியவருக்கே தவிர மற்றவர்களுக்குப் பயனளிக்காது.

கல்வி இவ்வுலக இன்பங்களில் ஒன்றாகும். அதன் மூலம் செயல்பட்டால் அது மறுவுலகத்துக்குரியதாக மாறிவிடும்.